பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 16 திங்கட்கிழமை 28.02.2022 கதிர் 341

## வவுனியா நகரில் டீசல் தட்டுப்பாடு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்திலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் இன்று காலை முதல் டீசலுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

டீசல் இன்மை காரணமாக நகரிலுள்ள சில எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையுடன், ஏனைய எரிபொருள்

☞2

# யாழ். பல்கலையின் பொதுப் பட்டமளிப்பு விழா மார்ச் 3, 4, 5ஆம் திகதிகளில் உள்ளக அரங்கில்!

### துணைவேந்தர் தலைமையில் ஊடகங்களுக்கு இன்று விளக்கமளிப்பு



யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் மார்ச் மாதம் 03ஆம், 04ஆம், 05ஆம் திகதிகளில், பல்கலைக் கழக உள்ளக விளையாட்ட ரங்கில் நடைபெறவுள்ளது.

முதல் இரண்டு நாள்களும் தலா மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் இரண்டு அமர்வுகளுமாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 619 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர்.

இது தொடர்பில்

☞2

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையை வரவேற்கின்றது தமிழ்க் கூட்டமைப்பு

### விரைவில் பதில் அறிக்கை என்கிறார் சம்பந்தன்





**இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

☞2

## வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் திறந்துவைப்பு

(வவுனியா நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் வவுனியாவில் திறப்பு வைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தலைமையில் இன்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள குறித்த அலுவலகத்தை முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்

☞2



## ஏ - 9 வீதியில் ஆணின் சடலம்



கிளிநொச்சி, ஏ - 9 வீதியின் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மித்த வீதியின் அருகில் உள்ள கால்வாயில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்குஎதிராகவவுனியாவில் இன்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக இன்று இந்தக் கையெழுத்து வேட்டை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வவுனியாவின் இலுப்பையடி, வைரவபுளியங்குளம், குருமன்காடு, கனகராயன்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலும் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

☞2

## ‘ஸ்கானர்’ இயந்திரத்துடன் வவுனியாவில் ஐவர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரப் பகுதியில் நிலத்தை கண்காணிக்க பயன்படும் ஸ்கானர் இயந்திரத்தை உடமையில் வைத்திருந்த 5 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

☞2



## சுண்டிக்குளத்தில் சிக்கியது தற்கொலைத் தாக்குதல் படகு

### இராணுவத்தினர், பொலிஸார் தீவிர விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., சுண்டிக்குளம் பகுதியில் கடலில் மறைத்து வைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுடைய தற்கொலைத் தாக்குதல் படகு ஒன்று இன்று இராணுவத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து

☞2



## ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இந்நிலையில் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை பற்றிய, 'இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தினை ஊக்குவித்தல்' எனும் தலைப்பிலான அறிக்கையின் முதற்பிரதி வெளியாகியுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல், புதிய அரசமைப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விபரீதம் உள்ளிட்ட தமிழர் நலன்சார் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நாம் அறிக்கையூடாக வெளியிடவுள்ளோம். - என்றார்.

## ஏ - 9 வீதியில் ஆணின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நபர் விபத்தால் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதற்கான தடயங்கள் வீதியில் காணப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'ஸ்கானர்' ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா மரக்கறிச்சந்தைப் பகுதியில் வைத்து கப் வாகனம் ஒன்று விசேட அதிரடிப் படையினரால் சோதனையிடப்பட்டது.

இதன்போது குறித்த வாகனத்தில் நிலத்தை ஆய்வு செய்வதற்குப் பயன்படும் ஸ்கானர் இயந்திரம் ஒன்று கொண்டு செல்லப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து வாகனத்தில் பயணித்தவர்களைக் கைதுசெய்த விசேட அதிரடிப் படையினர் அவர்களை வவுனியாப் பொலிஸில் ஒப்படைத்தனர்.

பியகம பகுதியைச் சேர்ந்த 4 பேரும், பிலியந்தல பகுதியைச் சேர்ந்த ஒருவருமாக ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்த வவுனியாப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## பயங்கரவாதத் தடைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ், முஸ்லிம் மக்கள் பலரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்துப் போராட்டத்தில் பங்குபற்றினர்.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுபர்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் தலைவர் கி.சேயோன உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (100)

## சுண்டிக்குளத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த படகு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட படகை வெட்டிச் சோதனையிடப்பட்டபோது படகில் தற்கொலைத் தாக்குதலுக்கான வெடிபொருள்கள் நிரப்பப்பட்டிருந்தன

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரும் பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் தமிழரசுக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் மாணவர் ஒருவருக்கு வழங்குவதற்காக சைக்கிள் ஒன்று மாவை சேனாதிராஜாவிடம் கையளிக்கப்பட்டது. (100)

## யாழ். பல்கலையின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு ஒன்று இன்று காலை 10 மணி யளவில் யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், கல்வி மற்றும் ஆராய்சி வெளியீடுகள் பிரிவின் உதவிப் பதிவாளர் எஸ். கே. பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கான ஊடக விவரிப்பை கலைப்பீடத்தின் பீடாதிபதியும், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவருமான பேராசிரியர் கே. சுதாகர் வழங்கினார் .

அங்கு அவர் வழங்கிய ஊடக விவரிப்பின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு, எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம், 04 ஆம், 05 ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாப் பெருந்தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு கடந்த 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி நிகழ்நிலையில் பட்டங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு வேந்தர் சம்பிரதாய பூர்வமாக இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டமையை உறுதி செய்வார்.

பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கியமையை உறுதிசெய்து பட்டதாரிகளைக் கௌரவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர் பட்டப் படிப்புகள் பீடம், கலைப் பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில் நுட்ப பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகத்தை)ச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 238 பட்டப்பின்தகைமைபெற்றவர்களுக்கும், 1, 795 உள்வாரி மாணவர்களுக்கும், 585 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் இருந்து 238 பேர் பட்டப்பின் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை 04 பேரும், முதுமெய்யியல்மாணிப் பட்டத்தை 16 பேரும், சைவ சித்தாந்தத்தில் முதுகலை மாணிப் பட்டத்தை 31 பேரும், முது வியாபார நிருவாக மாணிப் பட்டத்தை 47 பேரும், சூழல் முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணிப் பட்டத்தை 14 பேரும், முதுகல்வியியல்மாணிப் பட்டத்தை 101 பேரும், பண்பாட்டியலில் முதுகலைமாணிப் பட்டத்தை 10 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 02 பேரும், நூலகத் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப் பின் தகைமைச் சான்றிதழை 13 பேரும் பெறுகின்றனர்.

உள்வாரியாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 131 பேர் மருத்துவமாணி சத்திர சிகிச்சை மாணிப் பட்டத்தையும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 65 பேர் விவசாயத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 55 பேர் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும் பெறுகின்றனர்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த 52 பேர் சட்டமாணிப் பட்டத்தையும், 309 பேர் சிறப்புக் கலைமாணி பட்டத்தையும், 15 பேர் மொழிபெயர்ப்புக் கற்கையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், 02 பேர் கலைமாணி பொதுப் பட்டத்தையு ம் பெறவுள்ளனர்.

மேலும், 63 பேர் நுண்கலைமாணி (நடனம் - பரதம் ) பட்டத்தையும், 56 பேர் நுண்கலைமாணி (சங்கீதம்) பட்டத்தையும், 20 பேர் நுண்கலைமாணி ( சித்திரமும், வடிவமைப்பும்) பட்டத்தையும் பெறுகின்றனர். இவர்களுடன், சித்த மருத்துவ அலகைச் சேர்ந்த 38 பேர் சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி பட்டத்தையும் பெறுகின்றனர்.

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 24 பேர் தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தையும், 15 பேர் மருந்தகவியல்மாணி சிறப்புப் பட்டத்தையும், 18 பேர் மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 174 பேர் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும், ஒருவர் மீன்பிடியியல் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழையும் பெறுகின்றனர்.

இவர்களுடன், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து வியாபார நிருவாக மாணி (சிறப்பு) பட்டத்தை 246 பேரும், வியாபார நிருவாக மாணிப் பட்டத்தை 08 பேரும், வியாபார நிருவாக மாணி பொதுப் பட்டத்தை 12 பேரும், வணிகமாணிப் பட்டத்தை 72 பேரும் பெறுகின்றனர்.

அத்துடன், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 88 பேர் பொறியியல் தொழில்நுட்பமாணி (சிறப்பு) பட்டத்தையும், 77 பேர் உயிர்முறைமைகள் தொழில் நுட்பமாணி (சிறப்புப்) பட்டத்தையும் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் வவுனியா வளாக (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழக)த்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 27 பேர் தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தையும், 06 பேர் சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 06 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 41 பேர் தகவல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும், 23 பேர் கணினி மற்றும் பிரயோக கணிதம் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும், 13 பேர் சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

மேலும், அதன் வியாபார கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 34 பேர் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், 80 பேர் வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தையும், 25 பேர் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தையும் பெறுகின்றனர்.

இவர்களுடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கல்வி கற்று வெளியேறிய 146 பேர் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், 63 பேர் வணிகமாணிப் பட்டத்தையும், 370 பேர் கலைமாணிப் பட்டத்தையும், ஒருவர் சங்கீதமாணிப் பட்டத்தையும், 05 பேர் நடனமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக, சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைய பட்டமளிப்பு நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவுக்கு வழமை போன்று பட்டம் பெறும் மாணவர்களுடன், பெற்றோரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். பட்டம் பெறுகின்ற மாணவர்கள் மற்றும் அழைப்பின் பேரில் வருகை தர இருக்கின்றவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு விநயமாகக் கேட்டுகேகொள்கின்றோம்.

விழா மண்டபம் மற்றும் ஒன்று கூடல் மையத்தில் பட்டதாரிகளும் அவர்களுடன் அழைக்கப்பட்ட பெற்றோர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். வீடியோ மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பட்டமளிப்பு நிகழ்வுகள் அனைத்தும் எமது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் இணையத்தளம் வாயிலாகவும், முகப் புத்தகம், யூ ரியூப் சனல்களின் ஊடாகவும் நேரலையாக ஒளிபரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பட்டமளிப்பு விழா அரங்குக்கு வெளியிலும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, சமூக இடைவெளியைப் பேணுவதன் மூலம் இந்த நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு பல்கலைக்கழக சமூகம் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது - என்றார்.

## வவுனியா நகரில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களில் டீசல் தட்டுப்பாடு காரணமாக காலை வேளையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வாகன வரிசைகள் காணப்பட்டன. அத்துடன் சில எரிபொருள் நிலையங்களில் டீசல் இல்லை எனப் பாதையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாகன சாரதிகளும் டீசல் நிரப்புவதற்காக முண்டியடித்துக் கொண்டு வாகனங்களைக் கொண்டு செல்ல முற்பட்டதன் காரணமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்னால் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளன.

இதனால் வாகன சாரதிகள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் சாரதிகள் டீசலைத் தேடி ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கிச் சென்று வருகின்றனர். இதனால் தாங்கள் பெரும் சிரமங்களுக்கு உட்பட்டிருப்பதாகச் சாரதிகள் தெரிவிக்கின்றனர். (100)

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி
இலக்கம்—
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆளும் தரப்புக்குள் எதிரணி

இலங்கையில் ஆட்சியில் இருப்பது ஓர் அபூர்வமான – விநோதமான – அரசுக் கூட்டமைப்பு. வழமையாக, அரசுத் தரப்பில் ஆளும் கட்சி அல்லது ஆளும் கட்சிக் கூட்டமைப்பு இருக்கும். எதிரணியில் எதிர்க்கட்சிகள் இருக்கும். இப்படி இரண்டு தரப்புகள்தாம்.

ஆனால் இங்கு மட்டும்தான் ஆளும் கூட்டணிக்குள்ளும் – அரச தரப்புக்குள்ளும் – ஓர் எதிரணி செயற்படும் அதிசயம் உண்டு.

ஆளும் தரப்புக்குள் கூட்டமைப்பாக இருந்துகொண்டு, அதன் தலைமைக்கு உள்ளே குடைச்சல் கொடுத்தபடி, விமர்சித்தவாறு, 'அலுப்பு தரும்' ஓரணி தனியாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, அதையும் தாண்டி, ஆட்சித் தரப்பில் அமைச்சரவையில் இருந்தபடியே, அமைச்சரவை முடிவுகளுக்கும், தீர்மானங்களுக்கும், கூட்டுக் கடப்பாட்டுக்கும் மாறாக, உயர்நீதிமன்றத்திற்குச் செல்லும் அதிசயமும் நிகழும்.

இந்த ஆழம் கூட்டமைப்பு அசிங்கத்தின் அடுத்த அங்கம் – திருக்கூத்து – நாளை மறுதினம் அரங்கேறப் போகிறது.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கொண்ட இந்த அரசுக் கூட்டமைப்புக்கு அந்தப் பெரும்பான்மையைப் பெற்று தந்து, அது நிலைத்திருப்பதை உறுதிப்படுத்திய படி, மறுபுறத்தில், இப்போது நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் தகுதி நிலை – திறமை – புத்தி சாதுரியம் – இந்த அரசுக்குக் கிடையாது என பிரகடனப்படுத்துகிறது இந்த ஆளும் கூட்டமைப்பின் உள்வீட்டு எதிரணிக் கட்சிகள்.

அவை, நாடு எதிர்கொள்ளும் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான தமது ஆலோசனை விவரங்கள் அடங்கிய அறிக்கையை நாளை மறுதினம் கொழும்பு கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுரவில் நடைபெறும் ஒரு நிகழ்வில் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளன.

அரசுத் தலைமை – அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சி – தமது கருத்துக்களை உள்வாங்கவோ, செவிமடுக்கவோ, தம்முடன் கலந்துரையாடவோ தயார் இல்லை என்பதால் இந்த யோசனைத் திட்டத்தை தாம் நேரடியாக மக்கள் முன் வைக்கின்றோம் என்கின்றது அந்த அணி. தம்மைக் கணக்கெடுக்காத அரசுக் கூட்டமைப்புக்குள் அமைச்சர் பதவிகளையும் வகித்து கொண்டு, இந்த தரப்பினர் ஏன் நீடிக்கின்றனர் என்ற கேள்வி எழுவது இயல்பானதே. பதவி ஆசை, அந்தஸ்து சுகம், அரசியல் பாதுகாப்பு, சுயநலன் தவிர வேறு இதற்கு காரணங்கள் இருக்க முடியாது.

145 எம்.பிக்களை கொண்ட அரச நாடாளுமன்றக் குழுவில் இந்த அதிருப்தி அணியில் அமைச்சரவை அந்தஸ்துள்ள 5 அமைச்சர்கள் உட்பட 30 எம்.பிக்கள் உள்ளனர்.

ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணியின் இரண்டாவது பிரதான பங்காளிக் கட்சியான சு.கவும் இந்த அணியில்தான் உள்ளது. மேற்படி முப்பது எம்.பிக்களில் 14 பேர் சு.கவினர். அடுத்து விமல் வீரவன்ஸவின் கட்சியின் ஆறு எம்.பிக்கள். தவிரவும் வண.அத்துரலியே ரத்ன தேரர் போன்றோரும் இதில் அடங்குகின்றனர்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, நிமால் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர போன்றோரும் இந்த அணிக்குள்தான். ஆளும் கூட்டணியின் இரண்டு பங்காளிக் கட்சிகள் இந்த அதிருப்தி அணிக்குள் இணையவில்லை. தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியவை அவை. தினேஷின் கட்சியின் சார்பில் அவரும், தேசியப் பட்டியல் மூலம் எம்.பியான அவரின் மகன் ஜடமினி குணவர்த்தன மற்றும் சிசிர ஜெயக்கொடி. ஈ.பி.டி.பி. சார்பில் அமைச்சர் டக்ளஸ் உட்பட இரு எம்.பிக்கள் உள்ளனர்.

தற்போதைய அரசுக் கூட்டமைப்பின் ஆட்சி நிர்வாகம், கொள்கை போக்கு போன்றவற்றால் அதன் செல்வாக்கு அடியோடு சரிந்து வருகிறது. அந்தக் கெட்ட பெயரைத் தாங்கள் சேர்ந்து சுமக்காமல் தவிர்ப்பதற்கும், ஆட்சி தரப்புக்கு எதிரான மக்கள் சீற்றம் தங்கள் மீது விழாமல் விலகிக் கொள்வதற்காகவும், திட்டம் வகுத்து இப்படி தனித்து இயங்கும் பாசாங்கு காட்டுகின்றது இந்த அணி.

ஆனால் எல்லோருமே கூட்டு களவாணிகள் என்பது மக்களுக்கு நன்கு தெரிந்த விடயம். மக்களை சுலபமாக ஏமாற்ற முடியாது.



# உக்ரைன், ரஷ்யா மோதலால் தேயிலை ஏற்றுமதியில் தாக்கம்!

மாவட்டம் தாண்டிய அபிவிருத்திப் பணிகளையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னெடுத்து வருகின்றது. மலையக மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் எமது சேவை தொடரும் - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி பன்வில ரங்கல பெரு தோட்டம் மற்றும் பன்வில ஆத்தல மேற்பிரிவு ஆகிய பகுதிகளில் நவீன வசதிகளுடன் சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்த பகுதியில் அமையவுள்ள இந்த நிலையம், புள்ளக்காம்பரா அல்ல. இதனை சிறுவர் அபிவிருத்தி நிலையமென்றே விளிக்க வேண்டும். அதற்கேற்ற வகையிலேயே உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. கணனி முதல் தேவையான அனைத்துப் பயிற்சிகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படும். அதன் மூலம் சிறந்தொரு முன் அனுபவத்துடன் எமது பிள்ளைகள் பாடசாலைகளில் காலடி எடுத்து வைக்க முடியும்.

எமது கோரிக்கைக்கமைய இந்தத் திட்டத்துக்காக ஒன்றரை கோடி ரூபாவை ஒதுங்கிய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு நன்றிகூற வேண்டும். ஏனெனில் வாக்குதான் எமது இலக்கெனில் இதனையும் நுவரெலியாவுக்குத்தான் செய்திருக்க வேண்டும். ஆனால் வாக்கு என்பது எமது நோக்கம் அல்ல. மக்கள் சேவையே பிரதானமானது. எமது மக்கள் வாழும் பகுதிகளுக்கெல்லாம் எமது பணிகள் சென்றடையும்.

கண்டி மாவட்டத்துக்கு ஆளுங்கட்சியின் சார்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்திருந்தால் பாரிய சேவைகளை முன்னெடுத்திருக்கலாம். ஆனால் எதிரணியில் இருப்பவரால் அதனைச் செய்ய முடியாது. அவர்களால் கோவில் மணி உள்ளிட்ட பொருள்களை மட்டுமே வழங்க முடியும். அதனைத் தாண்டி பாரிய அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது. நாம் நாடாளுமன்றத்தில் இல்லாவிட்டாலும், எமது அமைச்சை பயன்படுத்தி, சேவைகளைச் செய்து வருகின்றோம்.

இப்பகுதியில் உள்ள வீதியைப் புனரமைத்து தருமாறு கோரியுள்ளனர். இதனையும் செய்து கொடுப்பதற்கு முயற்சிப்பேன்.

நாட்டில் இன்று பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. தற்போதைய சூழ்நிலையில் அது இன்னும் அதிகரிக்கும். உக்ரைன், ரஷ்யாவுக்கிடையில் மோதல் இடம்பெறுகின்றது. இதனால் தேயிலை ஏற்றுமதியிலும் தாக்கம் ஏற்படும். இந்நிலையையும் நாம் சமாளிக்க வேண்டும். - என்றார்.

# பிரதமரின் பணிப்புரைக்கமைய சிவாலயங்களுக்கு நிதியுதவி



சிவராத்திரி விரத புண்ணியகால நன்னாளை முன்னிட்டு சிவராத்திரி தினமான நாளை ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரத் தலங்கள் உட்பட, நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சிவாலயங் களுக்கு நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம், தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இளம் இந்துச் சிறார்களின் ஆன்மீக உணர்வுகளை மேன்மையுறச் செய்து, கலை நிகழ்வுகள் மூலமாக ஆக்கத்திறன் ஆளுமைகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதோடு, மேன்மேலும் அவர்களுக்கு ஊக்கம் நல்கும் விதத்தில் பரிசில்கள் வழங்கிப் பாராட்டுதல் என்ற முக்கிய நோக்கத்தை உடையதாகவே, மகாசிவராத்திரி விரத புண்ணிய நன்னாளை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பாரிய தீ!

கொழும்பு, ஜம்பேட்ட வீதியில் உள்ள கடை ஒன்றில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய கட்டடங்களுக்கு தீ பரவியுள்ளது.

10 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டுதீயைக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தன என தெரிவிக்கப்படுகின்றது.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# அணுசக்திப்படைகளை தயார் நிலையில் வைக்க புடின் உத்தரவு; பதற்றத்தில் உலகம்



ரஷ்யாவின் அணுசக்திப் படைகளை தயார் நிலையில் இருக்குமாறு ரஷ்ய அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யாவின் அணுசக்திப் படைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய நிலைக்கு மேற்குலக சக்திகளின் நடத்தையால் தூண்டப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு மேற்குலமே பொறுப்பேற்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைப்பாடு நேட்டோ நாடுகளின் தலைவர்களின் ஆக்கிரமிப்பு அறிக்கைகள் மற்றும் ரஷ்யா மீது மேற்கு நாடுகள் விதித்த பொருளாதாரத் தடைகளே புடினின் இந்த முடிவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த முடிவு ஆக்கிரப்பை நியாயப்படுத்த ரஷ்யாவின் ஒரு பகுதி அச்சுறுத்தல் என்று அமெரிக்கா கூறியள்ளது.

இதேநேரம் இது ஒரு ஆபத்தான முடிவு என நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் குறிப்பிட்டுள்ளார். அணுசக்கி படைகளை உச்ச தயார் நிலையில் இருக்குமாறு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உத்தரவிட்ட முடிவானது மிக வும் ஆபத்தானதாக மாற்றக் கூடும் என்று அமெரிக்காவின் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் எச்சரிக்கிறார்.

தவறான கணக்கீடு இருந்தால், விடயங்களை மிகவும், மிகவும் ஆபத்தானதாக மாற்றலாம் என்று அவர் குறிப்பிட்டார்.




## உக்ரைனில் வாழும் மக்களுக்கு செயற்கைக்கோளில் இணைய சேவை

உக்ரைனில் தனது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்லிங் செயற்கைக் கோள் மூலம் இணையசேவைவழங்கப்படும் என உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான எலன் மஸ்க் அறிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் பெரும்பாலான பகுதிகளில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் மற்றவர்களை தொடர்பு கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், உக்ரைன் நாட்டின் துணை பிரதமரும், அமைச்சருமானமைக்கைலோ பெடோரோவ், ரஷ்யாவின் தாக்குதலை குறிப்பிட்டு, உக்ரைன் மக்களுக்கு இணைய சேவை வழங்குமாறு எலன் மஸ்கிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கை விடுத்த 10 மணி நேரத்திலேயே உடனடியாக நடவடிக்கை எடுத்த எலன் மஸ்க், தனது ஸ்பேஸ் எக்ஸ் விண்வெளி நிறுவனத்தின்மூலம்ஏவப்பட்டஸ்டார்லிங் செயற்கைக் கோள் மூலம் உக்ரைனில் இணைய சேவை செயல்படுத்தப்பட்டுள்ளது என அறிவித்திருக்கிறார்.

## மிகப்பெரிய சரக்கு விமானத்தை தாக்கி நாசமாக்கியது ரஷ்யா




உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான அன்ரனோ-225 மிரியா மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது. உக்ரைனின் தலைநகர் அருகில் உள்ள ஹோஸ்டோமலில் உள்ள அன்டோனோவ் விமானநிலையத்தில் இத்தாக்குதல் நடந்தது என உக்ரோபோரோன்ப்ரோம் தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளது. விமானத்தை மறுசீரமைக்க அதிகமாக செலவாகும் என்றும் நீண்ட காலம் எடுக்கும் என்றும் அது கூறியது.

# பெலாரஸிலிருந்து உக்ரைனுக்கு ஏவுகணைத் தாக்குதல்

## நடத்துகிறது ரஷ்யா



பெலாரஸில் இருந்து உக்ரைன் நோக்கி ஏவுகணை ஏவப்பட்டதாக உக்ரைன் அதிகாரி தெரிவித்தார்

பெலாரஸில்இருந்துஏவப்பட்டஏவுகணைகள் வடக்கு உக்ரைனில் உள்ள சைட்டோமிர் விமான நிலையத்தைத் தாக்கியதாக உக்ரைனின் உள்துறை அமைச்சரின் ஆலோசகர் ஹெராஷ்செங்கோ தெரிவித்தார். பெலாரஸில் இருந்து உள்ளூர்நேரப்படிமாலை 5 மணியளவில் உக்ரைனில் இஸ்கந்தர் ஏவுகணைகள் ஏவப்பட்டன என கூறினார்.

உக்ரைன் மற்றும் ரஷ்ய அதிகாரிகள் உக்ரைனுடனான பெலாரஷ்ய எல்லையில் உள்ள ஒரு இடத்தில் பேச்சு நடத்த உள்ளனர் என்று ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் அலுவலகம் முன்னதாக தெரிவித்தது. பேச்சுளுக்கு முன்னதாக பெலாரஸிலிருந்து உக்ரைனுக்கு ஏவுகணைகள், விமானங்கள் மற்றும் உலங்க வானூர்திகள் பறக்காது என்று தனது பெலாரு சியப் பிரதிநிதியிடமிருந்து உறுதிமொழி பெற்றதாக ஜெலென்ஸ்கி முன்பு கூறினார். இந்நிலையிலேயே பெலாரஸிலிருந்து ஏவுகணை ஏவப்பட்டுள்ளது.




## ரஷ்யவின் விளம்பர வருமானம்; தடை விதித்தது கூகுள் நிறுவனம்

ரஷ்யாவின் விளம்பர வருமானத்திற்கு கூகுள் தடை விதித்துள்ளது. யூடியூப், பேஸ்புக்கைத் தொடர்ந்து கூகுள் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, ரஷ்யாவில் உள்ள அதிகாரபூர்வ தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள், கூகுள் நிறுவன இணையங்களில் விளம்பரங்கள் மூலம் பெறும் வருமானத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வரும் நிலையில், கூகுள் நிறுவனத்தின் தலைமை அமைப்பான ஆல்பாபெட் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. ஏற்கனவே, யூடியூப், பேஸ்புக் ஆகியவை, தங்கள் மூலம் ரஷ்ய ஊடகங்கள் ஈட்டும் வருமானத்திற்கு தடை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவாவில் ஈழத் தமிழருக்காக இந்தியா பேச வேண்டும்



## பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் அறிக்கை

ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குமாறு இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூற வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறார். ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கும் கடமை இந்தியாவுக்கு உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மேற்சொன்ன விடயங்களையும் இன்னும் பல அம்சங்களையும் உள்ளடக்கி அவர் வெளியிட்டுள்ள அறிக்கை -

ஈழத்தமிழர் இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டி வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையம், இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி நிறைவேற்றிய தீர்மானத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து புதிய அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கிறது.

இலங்கைப் போரின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எதற்கும் தீர்வு கிடைக்காத நிலையில், இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

போர்க்குற்றங்களை இழைத்தவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்பட்டிருப்பதன் மூலம் அவர்கள் தமிழர்களுக்கு எதிரான குற்றங்களை மேலும் மேலும் செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர்.

குடிமைப் பணிகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் 31 அமைப்புகளை இலங்கை இராணுவம் தான் நிர்வகிக்கிறது. பொலிஸாரின் பணிகளையும் இராணுவமே மேற்கொள்வதால் வடக்கு மாநிலத்தில் வாழும் தமிழ்ப் பெண்கள் கொடுமையான துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் புத்தமத பாரம்பரிய சின்னங்களைக் காப்பது, காடுகளை காப்பது என்ற பெயரில் தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்திற்கும் அதிக ஏக்கர் நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு நவம்பர் வரை நிலம் சார்ந்து 45 மோதல்கள் நடைபெற்றுள்ளன. இந்து ஆலயங்களில் புத்தர் சிலை சட்டவிரோதமாக நிறுவப்படுகிறது.

தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. தமிழர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்கள் தீவிரவாதிகளாக சித்திரிக்கப்படுகின்றனர் என்பன உள்ளிட்ட ஏராளமான குற்றச்சாட்டுகள் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் அதிர்ச்சி அளிப்பவையாகும்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது தாங்களாகவே நடவடிக்கை எடுக்கப் போவதாக 2 ஆண்டுகளுக்கு முன் மனித உரிமைப் பேரவையில் வாக்குறுதி அளித்த இலங்கை, அதை நிறைவேற்றவில்லை. மாறாக, தமிழர்களை அச்சுறுத்தி அடிமைப்படுத்தும் பணிகளைத்தான் செய்து வருகிறது. தமிழர்களின் நிலங்களைப் பறித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பது, அவர்களை அவர்களின் சொந்த பூமியிலிருந்து வெளியேற மறைமுகமாக அழுத்தமும், மிரட்டலும் விடுப்பது போன்ற செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. பன்னாட்டு விதிகளின்படி இவையும் இனப்படுகொலைக்கு ஒப்பான செயல்கள்தான் என்பதில் ஐயமில்லை.

மன்னிக்க முடியாத அளவுக்கு போர்க்குற்றங்களை இழைத்த ஒரு நாடு, அது குறித்த குற்ற உணர்வே இல்லாமல் தொடர்ந்து இனவெறித் தாக்குதல்களை நடத்துவதை அனுமதிக்க முடியாது. அதிலும் குறிப்பாக உணவுக்கும், எரிபொருளுக்கும் வழி இல்லாமல் தவிக்கும் இலங்கைக்கு உதவிகளை வாரி வாரி வழங்கும் இந்திய அரசு, இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் குற்றச்சாட்டை வேடிக்கை பார்க்கக்கூடாது. இலங்கைக்கு எந்த எச்சரிக்கையும் விடுக்காமல், அதன் இனவெறித் தாக்குதல்களைத் தடுக்காமல் உதவிகளை மட்டும் வழங்குவது இலங்கையின் செயல்களுக்கு இந்தியா துணை போவதாகவே பார்க்கப்படும்.

பொதுவான கடமைகளைக் கடந்து ஈழத்தமிழர்களின் தந்தை நாடு என்ற வகையில், ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கும் சிறப்புக் கடமையும் இந்தியாவுக்கு உண்டு. அதனால், ஈழத் தமிழர்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபடக்கூடாது என்றும் ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூற வேண்டும். அதைத்தான் உலகத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கை வரும் மார்ச் 3 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதம் நடத்தப்படவுள்ளது.

இந்த விவாதத்தில் இந்திய அரசின் பிரதிநிதி கலந்துகொண்டு ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்த வேண்டும். ஈழத் தமிழர் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுகின்றமையையும், இலங்கை இனச் சிக்கலுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணவும் தெற்காசிய சக்தி என்ற முறையில் இந்தியா நட வடிக்கை எடுக்க வேண்டும்.



## பத்தாயிரத்துக்குக் கீழாக குறைந்த கொரோனாவின் தினசரிப் பாதிப்பு

இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வரு கிறது.

இந்நிலையில், இன்று காலை 8 மணி நிலைவரப்படி கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக மேலும் 8,013 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய மத்திய சுகாதாரத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வரை 1,02,601 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கடந்த நாளில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டோரின் சதவீதம் 1.11 ஆகவும், பலியானவர்களின் எண்ணிக்கை 119 ஆகவும் பதிவாகியுள்ளன. மொத்த பலி எண்ணிக்கை 5,13,843 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்றில் இருந்து 4.23 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

கொரோனாத் தடுப்பூசி செலுத்தியோர் எண்ணிக்கை 177.5 கோடியை தாண்டியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்காவிடம் இருந்து அதிநவீன ட்ரோன்கள் விரைவில் கொள்முதல் செய்ய இந்தியா முனைப்பு



அமெரிக்காவிடமிருந்து 23 ஆயிரம் கோடி ரூபா செலவில் 30 அதிநவீன ஆயுதம் தாங்கிய ட்ரோன்களைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சு இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக தெரியவந்திருக்கிறது.

ப்ரிடேட்டர் ட்ரோன்ஸ் எனப் படும் 30 அதிநவீன ஆயுதம் தாங்கிய ஆளில்லா சிறியரக விமானங்களை கொள்வனவு செய்வது குறித்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள் ளது. இந்த ட்ரோன்களை சீனா, பாகிஸ்தான், எல்லை மற்றும் கடல் பாதுகாப்பு பணி களுக்காக இந்திய இராணுவத்தினர் பயன் படுத்தி சோதனை செய்துள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த ட்ரோன்களை கொள்வனவு செய்வதற்கான பேச்சுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், விரைவில் அவற்றுக்கான கொள்வனவு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகலாம் என இந்திய இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.



## உக்ரைனில் சிக்கியுள்ள இந்திய மாணவர்களே மேற்குப் பகுதிக்கு செல்லுமாறு அறிவிப்பு

உக்ரைனில் யுத்தத்தில் சிக்கித் தவிக்கும் இந்திய மாணவர்கள் அங்கிருந்து பக்கத்து நாடுகளான ருமேனியா, ஹங்கேரிக்கு போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்துவரப்படும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் உக்ரைன் தலைநகர் கீவ்விலிருந்து எல்லைப்பகுதிகளுக்கு செல்வதற்காக சிறப்பு ரயில் இயக்கப்படுகின்றன எனவும், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மாணவர்கள் மேற்கு பகுதியை நோக்கிச் செல்லுமாறு இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

வார இறுதி நாள்களில் கீவ்வில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்ததையடுத்து வெளிநாட்டு பிரஜைகளுக்கான சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாளை மஹா சிவராத்திரி தினத்தை ஒட்டி 20ஆயிரம் உருத்திராட்சைமாலை தயார்!



(காரைதீவு நிருபர் சகா)

சைவசமயிகள் தமது முழுமுதற் கடவுளான சிவனை நினைந்து அனுஷ்டிக்கும் மஹா சிவராத்திரி விரதம் நாளை செவ்வாய்க்கிழமை ஆகும்.

அதனையொட்டி சைவசமயிகள் வாழும் பட்டி தொட்டியெல்லாம் மஹாசிவராத்திரிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சிவாலயங்களில் சிறப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை 'சித்தர்களின் குரல்' அமைப்பினர் சிவராத்திரியையொட்டி பக்தர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு 20ஆயிரம் உருத்திராட்சை மாலைகளைத் தயார்படுத்தியுள்ளர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் மேலாளர் சிவசங்கர் ஜீ தலைமையில் மகேஸ்வரன் ஜீயின் பங்கேற்புடன் இந்த உருத்திராட்சை மாலைகள் நேற்று முன்தினம் வரை மட்டுநகரில் தயார் படுத்தப்பட்டன.

## பாலமுனையில் நாளை மகாயாகம்; சிவராத்திரியன்று உலக நலனுக்கு!



(காரைதீவு நிருபர் சகா)

சிவராத்திரி தினமான நாளை செவ்வாய்க்கிழமை உலக சேமத்திற்கான சிவராத்திரி மகா யாகமும், மகாசிவராத்திரி பூஜையும் நடத்த மண்டூர் பாலமுனையில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆத்ம ஞான பீடம் தயாராகி வருகிறது.

இந்நிகழ்வுகளை முன்னிட்டு ஸ்ரீ ஆத்மஞான பீடத்திற்கு லிங்கோற்பவ சமேதரராய் மட்டக்களப்பு ஸ்ரீ பேரின்பஞான பீடத்திலிருந்து ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி எஸ்.புண்ணியரெத்தினம்சுவாமிகள் நேற்று வருகை தந்தார்கள். சுவாமிகளுடன் மகா யாகத்திற்கான உயிர் ஜீவமூலிகைகள்மற்றும்அபிஷேகத் திரவியங்கள், வருகை தரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான உணவுப் பொருள்கள் அடங்கலாகசகலபொருள்களையும் தொண்டர்கள் கொணர்ந்தார்கள்.

## வீதியில் கல் பரவி இரு வாரமாகியும் அடுத்த கட்ட நடவடிக்கை இல்லை!

### காரைதீவில் மக்களுக்குப் பெரும் அசௌகரியம்

(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவுவிபுலாநந்தவீதியை'கார்ப்பெட்' வீதியாக்க கற்கள் பரவி இருவாரகாலமாகியும் இன்னும் அடுத்தகட்ட வேலைகள் ஆரம்பமாகவில்லை. இதனால் அந்த வீதியால் மக்கள் பயணிக்க முடியாத அவலநிலை நீடிக்கின்றது. கற்கள் அழுத்தமிடப்படாமல் தாறுமாறாகக் கிளம்பி கிடப்பதால் வாகனங்களின் ரயர்கள் ஓட்டை விழுந்து காற்றுப் போகின்றன. மக்கள் வேறு பாதைகளைப் பயன் படுத்த வேண்டிய துர்ப் பாக்கிய நிலை ஏற்பட் டுள்ளது.



கல் பரவி இருவாரங்களாகியும் அடுத்த கட்ட வீதி அமைப்பு வேலைகள் தாமதமாவது ஏன் என்பது தெரியவில்லை. மக்களுடன் எந்த கலந்தாலோசனையும் இல்லாமலும் இந்த வீதி செப்பனிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைவிட ஏலவே இருந்த கொங்கிறீட்வீதி நல்லது என என மக்கள் கூறுகின்றனர்.

இவ் அவலநிலை தொடர்பில் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேசசபைத் தவிசாளரிடம் கேட்டபோது இதுபற்றி மேலதிக விவரம் தெரியாது என்று கைவிரித்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையே இவ்வீதியை செப்பனிடுவதாகக் கூறப்படுகிறது. விபுலாநந்த வீதிக்கென 500மீற்றர் வீதி கார்ப்பெட் இடுவதற்கு நிதி வந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் தற்போது 350 மீற்றர் நீள வீதிக்கான முதற்கட்ட வேலையே இடம்பெற்றுள்ளது. மீதி 150 மீற்றர் நீள வீதிக்கான நிதியையும் அதே விபுலாநந்த வீதிக்கே செலவிட வேண்டும் என அவ்வீதியில்வாழும்பொதுமக்கள்கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஏலவே காரைதீவு பிரதான வீதியமைப்பிலும் இதே தரப்பினர் ஒருவழிப்பாதை, இருவழிப்பாதை என மாறி, மாறி போட்டு வீதியை சீரில்லாமல் வைத்திருக்கின்றனர் எனப் பாதசாரிகளும் வாகனச் சாரதிகளும் முறையிடுகின்றனர்.

இது தொடர்பாக காரைதீவு பிரதேசசபைத் தவிசாளரும் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் முறையிட்டுள்ளார் எனத் தெரிகிறது.



## மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற 'வட கிழக்கு சமர்' சைக்கிளோட்டம்

'வட கிழக்கு சமர்' என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு சைக்கிள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வு நேற்று மட்டக்களப்பு திருமலை வீதி ஊறணியில் நடைபெற்றது.

முன்னாள் சைக்கிள் ஓட்ட வீரர் அமரர் செல்வராஜாவின் ஞாபகார்த்தமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜ.பிறேம்நாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மாநகர முதல்வர் ரி.சரவணபவன் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரஸ்ரீ, மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி வி.ஈஸ்பரன், கல்கி அறக்கட்டளை ஸ்தாபகர் என்.நர்மதன், மட்டக்களப்பு மாவட்ட சமூகப் பற்றாளர் வி.லவக்குமார் ஆகியோரும், சிறப்பு அதிதியாக நடேசு உதயகுமார் (சுவிஸ்) அவர்களும் கலந்து கொண்டனர்.

102 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த சைக்கிளோட்டம் நேற்றுக் காலை திருமலை வீதி பஸ் தரிப்பிடத்திற்கு முன்னாள் ஆரம்பமாகி, கொழும்பு - திருமலை வீதி வழியாக கல்லடி மணிக்கூட்டு கோபுர வளைவு வீதி ஊடாக வாழைச்சேனை சுற்று வளைவை அடைந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இடத்தைச் சென்றடைந்தது.



இப்போட்டியில் முதலாம் இடத்தை பி.சதீஸ்காந், 2ஆம் இடத்தை பாலரசன்,(முல்லைத்தீவு), 3 ஆம் இடத்தை ரி.நிரல்சன், 4 ஆம் இடத்தை ஜ.பிரேம்நாத், 5ஆம் இடத்தை வி.பார்த்தீபன் ஆகியோர்கள் பெற்றனர். 3 வருடங்கள் கடந்த நிலையில் மாவட்டத்தில் இப் போட்டி நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்விற்கான அனுசரணையை எஸ்.வைகுந்தன் வழங்கியிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கையுடனான ரி–20 தொடர் 3–0 என கைப்பற்றியது இந்தியா



இலங்கை அணியுடனான ரி-20 தொடரின் மூன்றாவது போட்டியிலும் இந்திய அணி வெற்றிபெற்று தொடரை 3- 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நேற்று நடைபெற்ற தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. தசுன் சானக ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் டினேஸ் சந்திமால் 22 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் அவேஷ்கான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அடுத்ததாக, 147 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி, 16.5 ஓவர்களில் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஸ்ரேயஸ் ஐயர் ஆட்ட மிழக்காது 73 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 22, தீபக் ஹூடா 21 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் லஹிரு குமார 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

இந்தப்போட்டியினதும் தொடரினதும் நாயகனாக இந்திய அணியின் ஸ்ரேயஸ் ஐயர் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் மார்ச் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# மெக்சிக்கோ ஓனன் டென்னிஸ் தொடர் நிறைவு ரபேல் நடால் 3ஆவது முறையாக சம்பியனானார்



மெக்சிக்கோ ஓபன் டென்னிஸ் தொடரில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை தனதாக்கியுள்ளார்.

பிரிட்டன் வீரர் கமரூன் நூரியை எதிர்த்து இறுதிப் போட்டியில் விளையாடிய ரபேல் நடால், ஆட்டத்தின் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியிருந்தார். முதல் செட்டை 6 க்கு 4 என்ற கணக்கில் நடால் கைப்பற்றினார். இரண்டாவது சுற்றின் தொடக்கத்தில் மட்டும் சுதாரித்த நூரி, நடாலுக்கு சற்றே அழுத்தம் கொடுத் தார். இருப்பினும், அனுபவ வீரரான நடால் அந்த செட்டையும் 6 க்கு 4 என்ற கணக்கில் தன் வசப்படுத்தினார்.

இதன்மூலம் நேர் செட்களில் கமரூன் நூரியை வீழ்த்தி நடால் மூன்றாவது முறையாக மெக்சிக்கோ டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை வென்றார். ஏ.டி.பி. டென்னிஸ் தொடர்களில் நடால் வென்றிருக்கும் 91 ஆவது சம்பியன் பட்டம் இதுவாகும்.



## தென்னாபிரிக்காவுடனான டெஸ்டில் வெற்றிபெறுவதற்கு நியூசிலாந்துக்கு இறுதிநாளில் 332 ஓட்டங்கள் இலக்கு

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சேர்ச் மைதானத்தில் நடை பெற்று வருகிறது.

426 ஓட்டங்கள் பெற்றால் வெற்றிபெறலாம் என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி இன்றைய நான்காவது நாள் ஆட்ட நேர நிறைவில், 4 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

டெவொன் கொன்வெ 60 ஓட்டங்களோடும், டொம் ப்ளொன்டெல் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர். நாளை இறுதிநாளில் இன்னும் 332 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணியும், மீதமுள்ள 6 விக்கெட்டுக் களைக் கைப்பற்றி வெற்றியைத் தனதாக்கும் நோக்குடன் தென்னாபிரிக்காவும் களமிறங்கவுள்ளன.

# 24 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம்







3 டெஸ்ட், 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள மற்றும் ஒரே ஒரு ரி-20 போட்டி கொண்ட கிரிக்கெட் தொடர் களில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணியினர் தனி விமானத்தில் நேற்று பாகிஸ்தான் சென்றடைந் துள்ளனர்.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தைச் சென்ற டைந்த வீரர்கள் பலத்த பாது காப்புடன் விடுதிக்கு அழைத் துச் செல்லப்பட்டனர். ஒரு நாள் தனிமைப்படுத்தலுக்கு பிறகு அவர்கள் பயிற்சியில் ஈடுபட அனுமதிக்கப் படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தானில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி, அதன் பிறகு பாதுகாப்பு அச்சுறுத்தலைக் காரணம் காட்டி பாகிஸ் தானுக்குச் செல்ல மறுத்துவந்தது. இந்த நிலையில், 24 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணியினர் அங்கு பயணித்திருப்பதால் இந்தச் சுற்றுப் பயணத்தின் மீது அதிக எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

பாகிஸ்தான் அதிபர், பிரதமர் ஆகியோருக்கு வழங் கப்படுவது போன்ற உயரிய பாதுகாப்பு ஆஸ்திரேலிய அணியினருக்கு வழங்கப்படும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் தெரிவித்தி ருந்தார். வீரர்கள் தங்கியுள்ள விடுதி மற்றும் போட்டி நடக்கும் மைதானத்தைச் சுற்றி ஏறக்குறைய நான்காயிரம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

வீரர்கள் தங்களது தங்கும் விடுதியிலிருந்து 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மைதானத்திற்கு பேருந்தில் செல்லும்போது சாலையில் போக்குவரத்து நிறுத்தப்படும் என்றும் பாதுகாப்புக்கு இராணுவ ஹெலிக்கொப்டரும் சுற்றி வரும் என்றும் ஆஸ்திரேலிய வீரர்கள் தமது சுற்றுப் பயணத்திற்கான 6 வார காலமும் பலமான பாதுகாப்பு வளையத்தில் இருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய டெஸ்ட் அணித்தலைவர் பட் கமின்ஸ் ஊடகங்களுக்கு தகவல் வழங்கியபோது, பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளன. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எம்மை நன்றாக கவனித்துக்கொள்கிறது. போட்டி மற்றும் பயிற்சி தவிர மற்ற நேரங்களில் நாங்கள் விடுதிகளிலேயே இருக்கவேண்டியுள்ளது. இந்தியா போன்ற நாடுகளுக்கு பயணித்திருப்பதால் எமக்கு அது பழக்கப்பட்ட ஒன்றுதான். பாதுகாப்பு வளையத்தோடு, உயிரியல் பாதுகாப்பு வளையமும் முக்கியமானது. இவற்றையெல் லாம் தாண்டி, 24 வருடங்களுக்குப் பின்னர் நடைபெற விருக்கும் ஒரு கிரிக்கெட் தொடரில் விளையாடுவதிலும், அதனைஅனுபவிப்பதிலும்அவதானம்செலுத்துகிறோம், என்று தெரிவித்திருக்கிறார். இரு அணிகளுக்குமிடை யிலான முதலாவது டெஸ்ட் வருகிற மார்ச் 4 ஆம் திகதி ராவல்பிண்டியில் ஆரம்பமாகவிருக்கிறது.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் வலுவாக்க முடியாமைக்கு தமிழர் தரப்பினரே முக்கிய காரணம்!

## வடக்கின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா குற்றச்சாட்டு

1987 ஆம் ஆண்டுகளில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் 25 வருடங்களின் பின்னரே அது வடக்கு மக்களுக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது.

இருந்தபோதிலும் அந்த சபையின் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்களிடம் சரியான வகையில் 13 ஆவது சட்டத்தில் உள்ளவற்றை உள்வாங்கி அதை எமக்கு ஏற்புடையதாக்கும் வல்லமை மட்டுமல்ல அதில் அக்கறையும் இருந்திருக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா இதைத் தமிழர் தரப்பின் தோல்வியாகவே பார்ப்பதாகவும், இதனால்தான் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்கள் பல மத்தியை நோக்கிச் செல்வதற்கு வழிசமைத்தும் கொடுத்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் 13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தைப் பலப்படுத்தி அதனூடாக மாகாணசபைகளைப் பாதுகாப்பது தொடர்பான பொதுக் கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

சந்திரிகா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முற்றாகப் பூரணப்படுத்தக் கூடிய வகையில் கொண்டுவரப்பட்ட ஒரு திறமையான வரைவு எரிக்கப்பட்டது. அந்த வரைவை அன்று எதிரணியிலிருந்து எரித்தவர்களின் நிலைப்பாட்டை தவறென்று நான் கருதவில்லை.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறும் தரப்பினரும் அந்த வரைவை அன்றைய எதிர்த்தரப்பினருடன் இணைந்து எரித்திருந்தனர். அதை அன்று நான் நேரில் கண்டேன். இது மிகவும் ஒரு துரதிஷ்டவசமானதும் மாபெரும் தவறுமாகும். இதையடுத்து அந்த வரைவு கைவிடப்பட்டது.

அதன்பின்னர் பல முயற்சிகள், யோசனைகள் வந்திருந்தபோதும் கடந்த ஆட்சியில் தமிழர்களுக்கு எல்லா உரிமையும் வருகின்றதெனக்கூறி ஒன்றைக் கொண்டுவந்தார்கள் அதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

ஆகவே, தமிழ் மக்களுக்கான 13 ஆவது அதிகாரத்துடன் கூடிய சட்டத்தை மேலும் வலுவாகக் கொண்டு செல்ல முடியாமைக்குத் தமிழ் தரப்பினரே முக்கியகாரணமாக இருந்திருக்கின்றனர் என்பதே வரலாறு.

இந்த நிலையில் தீர்வுத் திட்டங்கள் நடைமுறையில் வருவதற்கான வாய்ப்புள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதேநேரம் இருக்கின்றதை பாதுகாத்துக்கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும்.

இதேவேளை இந்த 13 ஆவது திருத்த சட்டத்தில் ஒரு முக்கிய விடயமும் இருக்கின்றது. அதைத் தமிழ் தரப்பினர்தான் கைநழுவ விட்டுள்ளனர் என்றே கருதுகின்றேன்.

அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீட்டி பாருங்கள். அதில் ஒரு சரத்தில் குறிப்பட்ட திகதியொன்றைவரையறுத்து அத்திகதியிலிருந்து ஆயுதம் தாங்கிய தரப்பினர் அல்லது குழுவினர் தமது ஆயுதங்களை ஒப்படைத்தால் இலங்கை இராணுவம் குறிப்பாக முப்படையினரும் முகாம்களுக்குள் முடக்கப்படும் என்றுள்ளது. இதைத் தவறவிட்டது யார்?

சுதந்திரத்துக்குப் பின்னர் வேறு வேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகளாக இருந்தாலும் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன. அவையும் இல்லாது போய்விட்டன. ஆனாலும் அவற்றைவிட ஒரு முன்னேற்றகரமான ஏற்பாடாகத்தான் இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் இருக்கின்றது.

இதை நாம் இறுகப்பிடித்தோமா? என்றால் இல்லை. இதேநேரம் இந்த சட்டமூலத்தின் ஏற்பாட்டில் சில குறைபாடுகள் உள்ளன. ஆனால் இருப்பதையாவது பாதுகாப்போம் என்றால் அதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு சற்று கூடுதலாக சில மாதங்களே அது நடைமுறையில் இருந்தது. அதன் பின்னர் 25 ஆண்டுகள் வடக்கு கிழக்கில் மாகாணசபை இயங்கவில்லை.

ஏனைய மாகாணங்கள் இயங்கின. ஆனாலும் அதிலுள்ள அதிகாரத்தை வலுவாக்க அவர்கள் வடக்கு கிழக்கில் தமிழர்கள் மாகாண சபையை எப்போது ஏற்று நடைமுறைப்படுத்துவார்கள் என்றுதான் காத்திருந்தனர்.

இந்நிலையில் இக்காலத்தில் மாகாணத்துக்குரிய விடயங்கள் பலவற்றை மத்தி மெல்ல மெல்ல தனதாக்கிக் கொண்டது.

இதனிடையே 25 வருடங்களின் பின்னர் மாகாணசபை அதிகாரத்தை பெற்றுக்கொண்டவர்கள் அதன் அதிகாரத்தைக் கொண்டு என்ன செய்தார்கள்? அதன் அதிகாரத்தை வலுவாக்குவதில் என்ன பங்களித்தார்கள்?

வெறுமனே 440 பிரேரணைகளைக் கொண்டுவந்து நிறைவேற்றியதைத் தவிர வேறென்ன செய்தார்கள்? மாகாண சபையின் அதிகாரத்தை முழுமையாகக் கொண்டுவர என்ன முயற்சிகளை செய்தார்கள்? எதுவுமே இல்லை. இது வடக்கின் ஆட்சியாளர்கள் கண்ட தோல்வி அல்லது தவறவிட்ட சந்தர்ப்பம் என ஒப்புக்கொள்ள வேண்டும்.

சரியானவர்களை அந்த மாகாண சபைக்குத் தெரிவு செய்து சரியான வகையில் 13 ஆவது சட்டத்தில் உள்ளவற்றை உள்வாங்கி அதை எமக்கு ஏற்புடையதாக்கும் வல்லமை மட்டுமல்ல அதில் அக்கறையும் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. இதுவும் எமது தமிழ் மக்களின் தோல்வியாகவே காணப்படுகின்றது.

சரி, அதிகாரங்களை இழந்து வருகின்ற நிலையிலும் இருக்கின்ற அதிகாரங்களையாவது பாதுகாப்போம் என்றால் கூட அதற்கும் அக்கறை காட்டவில்லை.

இதேவேளை, இலங்கை அரசியல் சாசனத்தின்படி மாகாணசபை கலைக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் தேர்தல் நடைபெற வேண்டும் என இருக்கின்றது. அப்படியானால் ஏன் தேர்தல் நடைபெறவில்லை? இதற்கு காரணம் என்ன?

கடந்த ஆட்சியாளர்கள் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கூறி அதில் எல்லை மீள் நிர்ணயம் என்ற ஒன்றைக் கொண்டுவந்தார்கள்.

அதை மேற்கொள்ள குழு ஒன்றை அமைத்தனர். அவ்வாறு சட்ட ஏற்பாட்டை செய்திருந்தால் துறைசார் அமைச்சர் அதை இரு வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பார். சரி அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். அதில் அது தோல்வி கண்டிருந்தால் அதற்கும் சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. அதுவும் நடைபெறவில்லை.

இதைவிடுத்து மாகாணசபையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக கடந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட இந்த நடமுறைக்கு பங்காளர்களாக இருந்ததும் இன்று பறிபோகின்றது எனக் கூக்குரல் இடும் தமிழர் தரப்பினர்தான் என்பதே வேதனையானது.

அதைவிட மாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டும் என கடந்த ஆட்சியில் இருந்த தமிழ் தரப்பினர் நினைத்திருந்தால் குறைந்தது அதை நிறைவேற்ற பாதீடுகளில் பேரம் பேசியிருந்திருக்கலாம். அதையும் செய்திருக்கவில்லை. இவையே இந்த மாகாணசபை முறைமை அதிகாரங்கள் பறிபோகக் காரணமாகியிருந்துள்ளன. இந்நிலையில் இன்று பாரத பிரதமருக்குக் கடிதம் எழுதுவதால் என்ன பலன் கிடைக்கப் போகின்றது. என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தரமற்ற விமர்சனங்களுக்கு பதில் அளிக்கவே முடியாது!

## அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



மலையகத்தில் இன்று பலர் பல்வேறு அர்த்தமற்ற விமர்சனங்களை செய்து வருகிறார்கள். அவற்றிக்கு பதில் அளித்துக்கொண்டிருந்தால் வேலை செய்ய முடியாது. நியாயமான விமர்சனங்களுக்குப் பதிலளிக்கலாம். ஆனால் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக செய்யப்படும் விமர்சனங்களுக்கு என்னால் பதிலளித்துக் கொண்டு இருக்க முடியாது.

கடந்த காலங்களில் சுகாதாரத் துறை தோட்டக்கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்தது. அவற்றை நாங்கள் பொறுப்பேற்ற பின் 550 நிறுவனங்களைப் பொறுப்பேற்றிருக்கிறோம், முதற் கட்டமாக 59 நிறுவனங்கள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. இத்தனை வருடங்களாக சிலர் பேசிக்கொண்டிருந்தார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. ஆனால் நாங்கள் முடித்துக் காண்பித்துள்ளோம். அதே நேரம் இன்று பலர் தரமற்ற விமர்சனங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதனால் நான் வளர்வேனே தவிர ஒரு போதும் எவரும் என்னை வீழ்த்த முடியாது என தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அக்கரபத்தனை பசுமலை நாகசேன வீதயை இணைக்கும் குறுக்கு வீதி சுமார் 2.95 கோடி ரூபா செலவில் மத்திய மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீட்டில் காப்பெட் இட்டு புனரமைக்கப்பட்ட வீதியை மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் எனக்குத் தெரிய நான்கு தடவைகள் இந்த வீதிகளை அபிவிருத்தி செய்ய அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் வீதிகள் வரவில்லை. நாங்கள் அடிக்கல் நாட்டவில்லை. ஆனால் வீதிகள் வந்துள்ளன. தற்போது கொவிட் தாக்கம் காரணமாக மக்கள் பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். தற்போது கொள்கை ரீதியான அரசியல் முன்னெடுப்புக்கள் பொருத்தமற்றவை. அவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்றால் அபிவிருத்தி ரீதியான அரசியலை முன்னெடுக்க வேண்டும். எனவே, நாங்கள் அதனைச் செய்து வருகிறோம்.

நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் இந்த வருடம் 350 கிலோ மீற்றர் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி எனது அமைச்சினூடாக மாத்திரம் அபிவிருத்திக்காக 77.2 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து போடைஸ் வரை பார்த்தால் கூட வீதி அபிவிருத்தி நடந்து கொண்டு தான் இருக்கின்றது. இன்று அபிவிருத்திப் பணிகள் விலையேற்றம் காரணமாகக் கால தாமதம் ஆகியிருக்கலாம். ஆனால், இன்னும் சில வாரங்களில் அந்தப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதே நேரம் ஆரம்பத்தில் ஒரு கூட்டம் கூறியது எமது மக்களுக்கு கோதுமை மா தேவையில்லை என்று. அப்புறம் கோதுமை மாவை வைத்து அரசியல் செய்கின்றோம் என்றார்கள். அதனைத் தொடர்ந்து விலையைக் குறைத்துக் கொடுத்தவுடன் அது தாமதம் என்றார்கள். ஆகவே, தரமற்ற விமர்சனங்களுக்கு பதில் சொல்லத் தேவையில்லை.

30 வருட போரைக் கடந்து நாம் திரும்பி மீண்டு வந்துள்ளோம். ஆகவே, இந்தக் கொரோனா பாதிப்பில் இருந்தும் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறான தொற்றுக்கள் மற்றும் பிரச்சினைகள் ஏற்படும் போது மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும். நுவரெலியாவைப் பொறுத்த வரையில் மக்கள் பொறுமையாகத்தான் இருந்தார்கள். அதற்கு நான் முதலில் நன்றி தெரிவிக்க வேண்டும். ஆகவே, ஏனைய மாவட்டங்களைப் போன்று வீதி அபிவிருத்திகள் நடந்தால் நாளை பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும். கடந்த காலங்களில் இந்த வீதியில் மக்கள் செல்ல முடியாத நிலையே காணப்பட்டது. எத்தனையோ கர்ப்பிணித்தாய்மார்கள் இறந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்கள். ஆகவே தான் இந்த வீதியை அபிவிருத்தி செய்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் மேலும் பல்வேறு அபிவிருத்திகள் கட்டம்கட்டமாக முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.02.2022இல் வெளியிடப்பெற்றது.